## அழகப்பிரான் (சுந்தர தேசிகன்)

## வாழி திருநாமம்

புரட்டாசிச் சோதி தனில் புவி வந்தோன் வாழியே
பொழில் அமரும் வேங்கடவர் புரோகிதனார் வாழியே
ஆளவந்தார் தாளிணையாய் அமர்ந்தருள்வோன் வாழியே
வேங்கடமாம் விண்ணகரை விரும்புமவன் வாழியே
செண்பகத்தில் பொற்கூபம் செய்துகந்தான் வாழியே
யதிராசர்க்குத் தாபநீயம் ஈந்தருள்வோன் வாழியே
மாதவனை மறை அதனால் வாழ்த்துமவன் வாழியே
திருவழகப்பிரானார் தம் திருத்தாள்கள் வாழியே

---